இந்து தமிழ் திசை

# ஜிப்மரில் 11 மருத்துவ பேராசிரியர் பணியிடங்களுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி

புதுவை ஜிப்மரில் நுண்ணுயிரியல் 2, மருந்தியல் 3, உதவி பேராசிரியர் 2, காரைக்கால் ஜிப்மர் மருந்தியல் 1, நுண்ணுயிரியல் 3 என 11 மருத்துவ பேராசிரியர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட உள்ளன. கல்வி தகுதி, வயது வரம்பு விவரங்கள் ஜிப்மர் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தகுதியானவர்கள், வரும் ஜூன் 2-ம் தேதி முதல் ஜூலை 1-ம் தேதி மாலை 4.30 மணிக்குள் ஜிப்மர் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

ஆன்லைனில் சமர்ப்பித்த விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து ஜூலை 8-ம் தேதி மாலை 4.30 மணிக்குள் புதுவை ஜிப்மர் நிர்வாக பிரிவுக்கு அனுப்ப வேண்டும் என ஜிப்மர் இயக்குநர் வீர்சிங்நேவி தெரிவித்துள்ளார்.

தினகரன்
மே 19, 2025 திங்கட்கிழமை

# ஜிப்மரில் 11 மருத்துவ பேராசிரியர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி, மே 19: புதுச்சேரி ஜிப்மரில் நுண்ணுயிரியல் துறை பேராசிரியர்-2, உதவி பேராசிரியர்-2, மருந்தியல் துறை பேராசிரியர்-3, காரைக்கால் ஜிப்மரில் மருந்தியல் துறை பேராசிரியர்-1, நுண்ணுயிரியல் துறை உதவி பேராசிரியர்-3 என மொத்தமாக 11 மருத்துவ பேராசிரியர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படவுள்ளது. இப்பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான கல்வித்தகுதி, ஊதியம், வயது வரம்பு உள்ளிட்ட விவரங்களுக்கு ஜிப்மர் இணையதளத்தை பார்க்கவும்.

மேற்கண்ட காலியிடங்கள் தற்காலிகமானவை மற்றும் மாறுபாட்டிற்கு உட்பட்டவை. ஜிப்மரின் தேவைக்கு ஏற்ப அல்லது காலியிடங்களை மாற்றவோ, திருத்தவோ, ரத்து செய்யவோ இயக்குநருக்கு உரிமை உண்டு. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் வருகிற ஜூன் 2ம் தேதி முதல் ஜூலை 1ம் தேதி மாலை 4.30 மணிக்கு வரை *https://www.jipmer.edu.in* என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

மேலும், ஆன்லைனில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து, அதனை ஜூலை 8ம் தேதி மாலை 4.30 மணிக்குள் *facrectt2024@jipmer.ac.in* என்ற மின்னஞ்சலுக்கு அனுப்ப வேண்டும். அதே சமயம், ஆன்லைன் விண்ணப்பத்தினை பிரிண்ட் அவுட் எடுத்து உரிய ஆவணங்களை இணைத்து, உதவி நிர்வாக அதிகாரி, நிர்வாகம் 4, (ஆசிரியர் பிரிவு), 2வது தளம், நிர்வாக தொகுதி, ஜிப்மர், புதுச்சேரி-605006 என்ற முகவரிக்கு ஜூலை 8ம் தேதி மாலை 4.30 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். இத்தகவலை ஜிப்மர் இயக்குநர் வீர்சிங் நேகி தெரிவித்துள்ளார்.

தினமணி

# ஜிப்மரில் பேராசிரியர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

**புதுச்சேரி, மே 19:** புதுச்சேரி ஜிப்மரில் 11 மருத்துவப் பேராசிரியர்கள் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஜிப்மர் நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஜிப்மரில் நுண்ணுயிரியல் துறை 2, மருந்தியல் துறை 3, உதவி பேராசிரியர் 2, காரைக்கால் ஜிப்மர் மருந்தியல் 1, நுண்ணுயிரியல் 3 என 11 மருத்துவப் பேராசிரியர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட உள்ளன.

கல்வித் தகுதி, வயது வரம்பு போன்ற விவரங்கள் ஜிப்மர் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தகுதியானவர்கள் வரும் ஜூன் 2 முதல் வரும் ஜூலை 1-ஆம் தேதி மாலை 4.30 மணிக்குள் ஜிப்மர் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

இணையத்தில் சமர்ப்பித்த விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து ஜூலை 8-ஆம் தேதி மாலை 4.30 மணிக்குள் புதுவை ஜிப்மர் நிர்வாக பிரிவுக்கு அனுப்ப வேண்டும் என ஜிப்மர் இயக்குநர் வீர்சிங் நேவி குறிப்பிட்டுள்ளார்.